**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 116/2014**
**நாள் 02/02/2024, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - நீதி | த/பெயர் - கண்ணன் |
| வயது - 59 | தொழில் - |
| விலாசம் - எண் 2/30, பெருமாள் கோவில் தெரு, கொடிபள்ளம், திருநிலை ஊராட்சி, பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5-வது படித்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எத்தனை ஆண்டுகளாக உள்ளேன் என்றால் நான் பிறந்ததில் இருந்து அங்கு தான் வசிக்கிறேன். இந்த வழக்கை யார் யார் மீது போட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2-ம் வாதி குடும்பம் என நான் யாரை குறிப்பிடுகிறேன் என்றால் ஆசிரியராக உள்ளார். இந்த வழக்கில் 2-ம் வாதி சொத்தை கிரையம் பெற்றேன் என அவர் வழக்கில் குறிப்பிடாத விவரங்களையும் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் உண்மை தான் கூறுகிறேன். இந்த வழக்கு நடைபெறும் விவரம் எனக்கு யார் தெரிவித்தது என்றால் வாதி தான் என்னிடம் கூறினார். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை. வாதி அழைத்தன் பெயரில் அவருக்கு பௌவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**